**கவனிக்க.**- 29.08.2025 ஆந் திகதிய 2452 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2453 - 2025 සැප්තැම්බර් මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.09.04

2453 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1396 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1411 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள**,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## டிஜிட்டல் பொருளாதார அமைச்சு

## ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்

### ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் ஆரம்பதர தொழில்நுட்பம் சாரா சேவை வகுதியைச் சேர்ந்த சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025

டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் நுவரெலியாவில் அமைந்துள்ள சுற்றுலா விடுதிக்கு ஆரம்பதர தொழில்நுட்பம் சாரா சேவை வகுதியின் தரம் III சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் பதவியில் நிலவும் வெற்றிடம் (01) நிரப்புவதற்கு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை** :

ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை மூலம் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பேறுபேறுகளின் அடிப்படையில் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்தி வெற்றிடத்திற்காக ஆட்சேர்க்கப்படுவார். ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட (இல. 06 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் திட்டத்தின் பிரகாரம் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. **தேவையான தகைமைகள்** :

i. **கல்வித் தகைமைகள்** :

கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் ஆகக் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

ii. **அனுபவம்** :

ஏற்புடைய துறையில் பெற்றுள்ள அனுபவம் விசேட தகைமையாகக் கருதப்படும்.

iii. **உடற் தகைமைகள்** :

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல், உள தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

iv. **வேறு தகைமைகள்**:

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
- விண்ணப்பதாரி சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;
- பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு எல்லா வகையிலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

  குறிப்பு : அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களில் விண்ணப்பதாரியே சான்றுப்படுத்தி விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

3. **பதவியில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்** :

i. இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. தங்களுக்குரிய ஓய்வூதிய முறைக் குறித்து அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

ii. இந்த நியமனம் 03 வருட தகுதிகூர்நிலைக் காலத்திற்கு உட்பட்டதாகும். பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்களுக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

iii. 2020.10.16 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை18/2020 மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய உரிய ஏனைய அரசகரும மொழியில் / மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

iv. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும் அரசாங்க நிதி ஒழுங்கு விதிகளுக்கும் அரசாங்கத்தின் ஏனைய விதிகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு மற்றும் அவற்றுக்கு அவ்வப்போது செய்யப்படும் திருத்தங்களுக்கும் தாங்கள் இணங்கியொழுகுதல் வேண்டும்.

v. விண்ணப்பிக்கும் ஊடக மொழியைப் பின்னர் மாற்றியமைப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது. தாங்கள் நிமமனம் பெறுவதற்கு தகைமைப்பெறும் ஊடக மொழியாக தாங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடும் ஊடக மொழியாக அமையும்.

4. **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய இல.10/2025 எனும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் அட்டவணை II பிரகாரம் பதவிக்கு ஏற்புடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 40,000–10x450–10x490–10x540-12x590- ரூ. 61880.00 (PL-1-2025) ஆகும். அந்தச் சம்பளம் 2027.01.01 ஆம் திகதியே கிடைக்கப்பெறும். இந்தச் சுற்றறிக்கையின் அட்டவணை III இன் ஏற்பாடுகளுக்கு அமைய நியமனம் செல்லுபடியாகும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

6. தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்குப் பின்வரும் புள்ளிகள் வழங்கும் திட்டம் அடிப்படையாகக் கொள்ளப்படும் (தெரிவுசெய்யும் போது பரிசீலிக்கப்படும் ஆகக் குறைந்த புள்ளிகள் 50 ஆகும்.)

| *தொ. இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. | **மேலதிக கல்வித் தகைமைகள் :**<br>குறிப்பு : அதிகூடிய தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.<br>**கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றுதல்**<br>**கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை (உயர்தரம்) பரீட்சைக்குத் சித்தியடைதல்** | <br><br>10<br>20 | **20** |
| 02. | **சேவை அனுபவம் :**<br>அரசாங்க அல்லது அரச சார்பு அல்லது நியதிச்சட்ட நிறுவனங்களில் அல்லது தனியார் துறை ஹோட்டல் / உணவகங்களில் இந்தப் பதவிக்குச் சமமான பதவியில் ஆகக் குறைந்தது 06 மாத சேவை அனுபவம்<br>அரசாங்க அல்லது தனியார் துறையில் ஏதேனும் பதவியில் ஆகக் குறைந்தது 03 மாத சேவை அனுபவம். | 20<br><br>10 | **30** |
| 03. | பதவிக்குரிய துறையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கப் பல்கலைக் கழகமொன்றினால் வழங்கப்படும் அல்லது மூன்றாம்நிலைக் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 03 மாதத்திற்கு குறையாத டிப்ளோமா பாடநெறி | 25 | **25** |
| 04. | **அரசகரும மொழி அல்லாத மொழிப் பாடநெறியைக் கற்றிருத்தல் :**<br>**குறிப்பு** : அதிகூடிய தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.<br>சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி பாடநெறியைப் பூர்த்திசெய்திருத்தல். (பதவிக்கு ஆட்சேர்க்கப்படும் ஊடக மொழிக்கு மேலதிகமாக) | | 20 |

| *தொ. இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| | 03 மாதங்களுக்கு குறையாத 06 மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு | 10 | |
| | 06 மாதங்களுக்கு மேற்பட்ட பாடநெறிக்காக | 20 | |
| 05. | **நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறன் மற்றும் ஆளுமை:** | | 05 |
| | பொது அறிவு மற்றும் அறிவாற்றல். | 02 | |
| | பல்வேறு மொழிகளில் தெளிவாக கருத்து தெரிவிக்கும் ஆற்றல் மற்றும் ஆளுமை | 03 | |
| 06. | **மொத்தம்** | | **100** |

**குறிப்பு** - தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களில் உரிய கால எல்லைககள் குறிப்பிடப்படவில்லை எனின், உரிய நிறுவனத்திடமிருந்து அத்தகைய சான்றிதழ்களின் உரிய கால எல்லைகளை எழுத்துமூலம் உறுதிப்படுத்த வேண்டியது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும். அத்தகைய கால எல்லைகள் குறிப்பிடப்படாத மற்றும் கால எல்லைகள் உறுதிப்படுத்தப்படாத சான்றிதழ்கள் புள்ளிகள் வழங்குவதற்கு பரிசீலிக்கப்படமாட்டாது.

7. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்** :

எல்லா விதத்திலும் முழுமையான விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

விண்ணப்பதாரரால் முறையாக சான்றளிக்கப்பட்ட அனைத்து சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் மற்றும் பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

வசிப்பிடத்தை நிரூபிக்க கிராம அலுவலர் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.

நேர்முகப் பரீட்சையின் போது ஆளடையாளத்தை பரீட்சிப்பதற்கு பின்வரும் அடையாள ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்:

i. ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

8. **விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய முறை :**

i. விண்ணப்பங்கள் 2025.09.26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், சுஹுருபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அந்தத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ii. இந்த அறிவித்தலின் இறுதியில் ஒரு மாதிரி விண்ணப்பப்படிவம் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை A4 அளவு தாளில் தயாரித்து முதல் பக்கத்தை 01 முதல் 08 வரையிலும், இரண்டாவது பக்கம் 09 முதல் 10 வரையிலும், மூன்றாவது பக்கம் 11 முதல் 14 வரையிலும் தயார்படுத்தி, தங்களது சொந்த கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும்.

iii. விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையில் "சுற்றுலா விடுதி பொறுப்பாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனக்கு குறிப்பிடுதல் வேண்டும்.

iv. விண்ணப்பத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர் / சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையாளர் / வழக்கறிஞர் / பிரசித்த நொத்தாரிசு / முப்படைகளின் ஆணையிடப்பட்ட அதிகாரி

அல்லது ரூ. 82,150.00 அல்லது அதற்கு மேல் மாதாந்த திரண்ட சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியை வகிக்கும் அதிகாரி ஒருவரால் சான்றளிக்கப்படல் வேண்டும்.

v. அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தற்போது பணிபுரியும் உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பங்களை தாங்கள் பணியாற்றும் திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

vi. இத்துடன் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தொலைந்து போதல் அல்லது தாமதமாக கிடைக்கப்பெறுதல் குறித்த எந்த முறைபாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.

9. **பொய்யான தகவல்களை சமர்ப்பித்தல் :**

தங்களது விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் தகவல் ஆட்சேர்ப்புக்கு முன்னர் தவறானது அல்லது பொய்யானது எனக் கண்டறியப்பட்டால், உங்களது பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படும். ஆட்சேர்ப்புக்குப் பின்னர் அத்தகைய தவறான அல்லது பொய்யான தகவல்கள் கண்டறியப்பட்டால், ஏற்புடைய நடைமுறைகளுக்கு உட்பட்டு சேவையை நிறுத்துவதற்கு / பதவி நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலப் பதிப்புகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படுமிடத்து சிங்கள மொழிப் பதிப்பு மேலோங்கும்.

11. இந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத எந்தவொரு விடயம் தொடர்பிலும் முடிவுகளை எடுக்கும் உரிமை ஆட்களைப் பதிவுசெய்யும் ஆணையாளர் நாயகத்திற்குரியது.

12. விண்ணப்படிவத்தை drp.gov.lk இணையத்தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆணையாளர் நாயகம்,
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்.

ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்,
பத்தரமுல்லை.
2025, ஓகத்து 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்**

**ஆரம்ப தர தொழில்நுட்பம் சாரா சேவை வகுதியின் சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025**

| | |
|---|---|
| நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் ஊடக மொழி | |

(உரிய இலக்கத்தை கூண்டில் எழுதுக. சிங்களம் - 2 / தமிழ் - 3 / ஆங்கிலம் - 4)

**குறிப்பு :-** விண்ணப்பிக்கும் ஊடக மொழியை பின்னர் மாற்றியமைக்க முடியாது.

1.0 1.1 முழுப்பெயர் (திரு./திருமதி/செல்வி) : ..........................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்) ..........................................................................................................

1.2 முழுப்பெயர் : ..........................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ..........................................,,,..........................................................................

1.3 முதலொழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்) உதா- ஏ.எம்.என்.பெரேரா

1.4 முதலொழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ..........................................................................................................

2.0 2.1 நிரந்தர முகவரி : ....................................................................
(சிங்களத்தில் / தமிழில்) ....................................................................

2.2 நிரந்தர முகவரி : ....................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ....................................................................

2.3 தனிப்பட்ட தொலைபேசி இலக்கம்:
நிலையான : ......................................................... கையடக்க: .........................................................

3.0 தேசிய ஆளடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 பிறந்த திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

5.0 விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு (2025.09.26) வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

6.0 ஆண் / பெண் பால்நிலை : ....................................................................

7.0 விவாகமானவரா? / விவாகமாகாதவரா? : ....................................................................

8.0 இனம் : ....................................................................

9.0 கல்வித் தகைமைகள் :

9.1 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை :
வருடம் : ............................................
சுட்டெண் : ............................................
ஊடக மொழி : ............................................

| *தொ. இல.* | *விடயம்* | *தரம்* |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |

9.2 க.பொ.த. உயர் தரப் பரீட்சை :

வருடம் : ..........................................
சுட்டெண் : ............................................
ஊடக மொழி : ............................................

| *தொ. இல.* | *விடயம்* | *தரம்* |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

10.0 தற்போது அரசாங்க சேவை மற்றும் மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டிருப்பவராயின்,

10.1 சேவை நிலையம் : ..........................................................................................
10.2 தற்போது வகிக்கும் பதவி : ...............................................................................
10.3 பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி: .....................................
10.4 பதவியின் தன்மை:
நிரந்தர/ தற்காலிக/ அமய/ பதில் என்பது பற்றி: ............................................

11.0 தாங்கள் எப்போதாவது குற்றமொன்றுக்கு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? ஆம் / இல்லை
ஆம் எனில் தகவல்களைத் தரவும்.................................................................................

12.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை:

i. இந்த விண்ணபத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானதும் சரியானதும் என குறிப்பிடுகின்றேன்.
ii. என்னால் வழங்கப்பட்டுள்ள இந்த உறுதியுரை பொய்யானதென நிரூபிக்கப்படுமிடத்து ஆட்சேர்க்கப்படுவதற்கு தகுதியற்றவன் ஆவேன் என்பதையும் நியமனத்தின் பின்னர் நிரூபிக்கப்படுமிடத்து எந்தவித நட்டஈடும் இன்றி உடனடியாக பதவிநீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் அறிவேன்.
iii. இங்கே குறிப்பிட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றியமைக்கமாட்டேன்.

................................. .......................................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

13.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ..................................................................... என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் என்றும் அவர் என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

.................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை

பெயர் :.......................................
பதவி :.......................................
முகவரி :.......................................
திகதி :.......................................

14.0 திணைக்கள / நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :
(அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்)

திரு./திருமதி/செல்வி.................................................................................... இந்தத் திணைக்களத்தில் / நிறுவனத்தில் நிரந்தர/ தற்காலிக/ அமய ............................... (பதவி) ஆக சேவையாற்றுகின்றார் என்றும், இந்தப் பதவிக்கு இவர் தெரிவுசெய்யப்படுமிடத்து அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

........................... ...........................................................
திகதி திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை

09-23

## நீதிச்சேவை ஆணைக்குழு

### பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் நிலவும் "காதி" பதவி வெற்றிடங்களுக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன் கீழ் காதி நீதிபதிகளை நியமித்தல் - 2025

கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் :

விண்ணப்பதாரி முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆணாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமனான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான அரசாங்க உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றி ஒழுகுபவராகவும், 40 வயதுக்கு மேற்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும், நல்லொழுக்கம் உள்ளவராகவும் இருக்க வேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்பும் உள்ளவராகவும் விவாகமானவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற கால எல்லைக்கு நியமனம் செய்யப்படுவார்.

காதியாக நியமிக்கப்படுபவர் அப்பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பது சட்டரீதியாக அவசியமாகும்.

காதி ஒருவருக்கு ரூபா 7,500.00 மாதாந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காக மாதாந்தம் ரூபா 6,250.00 கொடுப்பனவொன்றும் வழங்கப்படும்.

கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய, விண்ணப்பங்கள் 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "காதி" எனக் குறிப்பிடல் வேண்டும். ஆவணங்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

ஆனந்தி கனகரத்தினம்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த. பெ. இல. 573, புதுக்கடை,
கொழும்பு 12,
2025, செத்தெம்பர் 04.

**அட்டவணை**

| | *காதி நீதிமன்றம்* | *காதி நீதிமன்ற அதிகாரப் பகுதி* |
|---|---|---|
| 01 | போறா சமூகம் | இலங்கை போறா சமூகம் |
| 02 | கல்முனை | அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவு |
| 03 | பொலன்னறுவை | பொலன்னறுவை மாவட்டத்தின் பொலன்னறுவை நீதிப்பிரிவு |
| 04 | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் மாவட்டத்தின் யாழ்ப்பாணம், பருத்தித்துறை மற்றும் ஊர்காவற்றுறை நீதிப்பிரிவு |

மாதிரி விண்ணப்பப்படிவம்

1965 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கம் ஆகிய சட்டங்களினால் திருத்தப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115 இன்) கீழ் காதிப் பதவிக்கான விண்ணப்பப்படிவம்

காதிப்பிரிவு : ____________________

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :

(உதாரணம் : இப்ராஹிம், ஏ. எல். எம்.)

2. முழுப்பெயர் :

(உதாரணம் : ஆதம் லெப்பே மொஹமட் இப்ராஹிம்)

3. நிலையான வசிப்பிடம் :

4. அஞ்சல் முகவரி :

5. பிறந்த திகதி : | தி | தி | மா | மா | வ | வ | வ | வ |

6. வயது :

7. இனம் :

8. சமயம் :

9. தே. அ. அ. இல. :

10. தொலைபேசி இல. :

11. கல்வித் தகைமைகள் :

1. ------------------------------------------------------------
2. ------------------------------------------------------------
3. ------------------------------------------------------------
4. ------------------------------------------------------------
5. ------------------------------------------------------------

12. தொழில் தகைமைகள் :

1. ------------------------------------------------------------
2. ------------------------------------------------------------
3. ------------------------------------------------------------
4. ------------------------------------------------------------
5. ------------------------------------------------------------

13. எழுத, வாசிக்கத் தெரிந்த மொழிகள் :

14. இஸ்லாம் சட்டம் பற்றிய அறிவுண்டா ? : ஆம் ☐ இல்லை ☐

15. விவாகமானவரா ? : ஆம் ☐ இல்லை ☐

16. மனைவி உயிருடன் இருக்கின்றாரா? : ஆம் ☐ இல்லை ☐

17. முன்னைய, தற்போதைய தொழில்கள் (திகதி விபரங்களுடன்) :

| *முதல்* | *வரை* | *தொழில்* | *இடம்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

18. விண்ணப்பதாரிக்குரிய சொத்துக்களின் பெறுமதி : ரூபா

19. மாதாந்த வருமானம் : ரூபா

20. கடன்கள் இருப்பின் தொகை விபரம் : ரூபா

21. சென்ற 10 வருட காலப்பகுதியினுள் நீர் முனைப்பாக அரசியலில் ஈடுபட்டிருந்தீரா ? : ஆம் ☐ இல்லை ☐

22. நீர் வருமான வரி செலுத்துமொருவரா ? : ஆம் ☐ இல்லை ☐

23. உமக்கெதிராக நீதிமன்றமொன்றில் குற்றவியல் வழக்கேதும் உள்ளதா? இருந்ததா ? : ஆம் ☐ இல்லை ☐

24. நீதிமன்றங்களில் தண்டனை பெற்றிருப்பின் அதுபற்றிய விபரங்கள் ? :

25. உம்மைப் பற்றி நன்கறிந்துள்ள, உம்மைப் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் பெறக்கூடியவர்கள் :

| | |
|---|---|
| பெயர் : | பெயர் : |
| முகவரி : | முகவரி : |
| தொலைபேசி இல. : | தொலைபேசி இல. : |
| தொழில் : | தொழில் : |
| உம்மையறிந்துள்ள காலப்பகுதி : | உம்மையறிந்துள்ள காலப்பகுதி : |

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----------------,
திகதி :-----------------. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**குறிப்பு**.- அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகளை இத்தோடு இணைக்கவும்.

09-37

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ (கண்டிய/பொது) பதிவாளர் பதவி – அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. உரிய பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. உரிய பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025, ஒற்றோபர் மாதம் 07ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2025, ஓகத்து 19.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| அம்பாறை | அட்டாளைச்சேனை | தீகவாபி பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் அட்டாளைச்சேனை பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (சிங்கள மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாறை |
| அம்பாறை | பதியதலாவை | தீகவாபி பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் அட்டாளைச்சேனை பிரிவின் விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி (சிங்கள மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாறை |

09-39

---

## இலங்கைப் பாராளுமன்றம்

பதவி வெற்றிடங்கள்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியின் இணையத்தளப் பதிப்பாசிரியர் (ஆங்கிலம்/சிங்களம்) பதவிக்கு சிறந்த தேகாரோக்கியமும் நல்லொழுக்கமும் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, கல்வி மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2025.09.21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் “பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே” எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணபிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும். (இந்த அறிவித்தல் தொடர்பான விபரங்களை www.parliament.lk என்ற இணையத் தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்).

**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01**

1. **சம்பள அளவுத்திட்டம்:-**

   2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 74,810-9x1,360-6x1,670- ரூ. 97,070/- ஆகும் (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்தச் சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த மாதாந்த சம்பளம் ரூ. 114,715/- ஆகும்).

2. **வயதெல்லை:-**

   விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 22 வயதுக்கு குறையாமலும், 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

3. **கல்வித் தகைமைகள்:-**

   பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் கணினி விஞ்ஞானம் / தகவல் தொழில்நுட்பம் / தகவல் முறைமை பற்றிய பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   அத்துடன்

   க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

4. **தொழில் தகைமைகள் :**

அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றினால் வழங்கப்படும் Java மற்றும் scripting மொழி அதாவது Java Script மற்றும் PHP போன்ற எழுத்துரு மொழி பற்றிய சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

MySQL/MSSQL போன்ற தரவுமூல முகாமைத்துவ முறைமை மற்றும் Apache, IIS வலைச் சேவையகங்கள் (web server) பற்றிய சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்

5. **அனுபவம் :**

தகைமைகளைப் பூர்த்திசெய்த பின்னர் இணையத்தளப் பதிப்பு அல்லது விருத்திசெய்தல் பற்றிய மூன்று (03) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்ப்பு முறை :**

எழுத்து / தொழில்சார் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

7. **பரீட்சை நடவடிக்கை முறை:-**

(அ) **எழுத்து / தொழில்சார் பரீட்சை :**

எழுத்து / தொழில்சார் பரீட்சையின்போது, விண்ணப்பதாரர்கள் தொழில்சார் பணிப்பொறுப்புகள் தொடர்பாக கொண்டிருக்கும் அறிவும் புரிந்துகொள்ளலும் பரிசீலிக்கப்படுவதுடன், இப்பரீட்சையில் அதிகபட்சமாக பெற்றுக்கொள்ளக்கூடிய புள்ளிகள் நூறு (100) ஆகும்.

(ஆ) **நேர்முகப் பரீட்சை :**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவால் விண்ணப்பதாரர்களின் தகைமைகள் பரிசீலிக்கப்படும்.

எழுத்து / தொழில்சார் பரீட்சையில் நாற்பது (40) இலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், நேர்முகப் பரீட்சையில் பின்வரும் தகுதிறன்களுக்கு இணங்க புள்ளிகள் வழங்கப்படும். இவற்றில் பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகபட்ச புள்ளிகள் நூறு (100) ஆகும்:-

| *தொடர் இலக்கம்* | *தகுதிறன்* |
|---|---|
| 1 | மேலதிக கல்வி மற்றும் தொழில் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | தொழில்சார் அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறன்கள் |

8. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும்:-**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிக்குரிய ஓய்வூதிய உரித்து பற்றி அரசாங்கத்தால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு முதலில் மூன்று (03) வருட கால தகுதிகாண் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும். அரச/ மாகாண அரச சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவி ஒன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் ஒரு வருட கால பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதிப் பிரமாணக் குறிப்புகளுக்கும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க இயைந்தொழுக வேண்டும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் அரசாங்கம் குறித்துரைக்கும் ஒரு விகிதத்தில் தத்தமது சம்பளத்திலிருந்து விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் பற்றிய ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையைச் செலுத்த வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு விடுவிப்பு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

9. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதிகள் அல்ல) இணைத்து அனுப்ப வேண்டும். தேவைப்படுத்தப்படும்போது மட்டும் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்வித் தகைமை சான்றிதழ்கள் ;
(இ) தொழில் தகைமை சான்றிதழ்கள் ;
(ஈ) அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள்.

10. அரச/மாகாண அரச சேவையில்/அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில்/நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள/ நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

11. பதவியைப் பெற ஏதாவது ஒரு விதத்தில் அழுத்தம் செலுத்துவது தகுதியீனத்திற்கு வழிவகுக்கும்.

12. விண்ணப்பத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் தகவல் விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் பிழையானது எனக் கண்டறியப்பட்டால், அப்போது அவர் தகைமையற்றவர் எனக் குறிப்பிடப்படுவதற்கும் மற்றும் நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் அது காரணமாக அமையும்.

13. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படுகின்ற அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படுகின்ற அல்லது திணைக்கள/ நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படாத (தற்பொழுது அரசாங்க/மாகாண அரச சேவையில்/கூட்டுத்தாபனங்களில்/நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றுகின்ற) அல்லது மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

குஷானி ரோஹணதீர
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2025.09.02.

இலங்கைப் பாராளுமன்றம்

மாதிரி விண்ணப்பப்படிவம்
.................................................. பதவி

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :..........................................................................................................
..........................................................................................................................................................

(ஆ) முதலெழுத்துக்களில் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில் ) : ..................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

(இ) முழுப் பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்தில்) :..........................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

02. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

03. (அ) தனிப்பட்ட முகவரி :......................................................................................................................................
..........................................................................................................................................................
..............................................................................................................................................

தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

வட்ஸ்அப் இலக்கம் : | | | | | | | | | | |

(ஆ) அலுவலக முகவரி : ......................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

(இ) அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய தபால் முகவரி

தனிப்பட்ட ☐ அலுவலக ☐

04. (அ) பிறந்த திகதி : ..........................................................................................................
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :
வருடங்கள் ..........மாதங்கள் .............நாட்கள்.............

05. விவாக நிலை : ..........................................................................................................
06. பாலினம் : ..........................................................................................................
07. இலங்கைப் பிரசையா? : (ஆம்/இல்லை)
08. கல்வித் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
க.பொ.த. (உ/த)

| *பாடம்* | *பெற்ற சித்தி* | *ஆண்டு* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

க.பொ.த. (சா/த)

| *பாடம்* | *பெற்ற சித்தி* | *ஆண்டு* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

09. தொழில் தகைமைகள் : (சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்)

| *கற்கை நெறி* | *நிறுவனம்* | *நடைமுறைக்கு வரும் திகதி* |
|---|---|---|
| | | |
| | | |

10. அனுபவம்: (சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்)

| *நிறுவனம்* | *பதவி* | *சேவைக் காலம்* |
|---|---|---|
| | | |
| | | |

11. தற்போதைய தொழில் பற்றிய விபரம்:-

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும்: ..........................................................................................................................................................................................................................................

(ஆ) முதல் நியமனத் திகதி:..........................................................................................................................

(இ) தற்போது வகிக்கும் பதவி:........................................................................................................................

(ஈ) மாதாந்த அடிப்படைச் சம்பளம்:..................................................................................................................

(உ) கொடுப்பனவுகள்:....................................................................................................................................

(ஊ) முழுமொத்த சம்பளம்:..............................................................................................................................

12. நீங்கள் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாக இனங் காணப்பட்டுள்ளீர்களா? (ஆம் / இல்லை) ஆமெனில், அதுபற்றிய விபரங்களைக் குறிப்பிடுக: ..................................................................................................................................................................

13. நீங்கள் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியுள்ளீர்களா?
(ஆம் / இல்லை) ஆமெனில், அதுபற்றிய விபரங்களைக் குறிப்பிடுக.
..............................................................................................................................................................

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் தவறானது அல்லது பொய்யானதென நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால், இந்தப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்றும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் கண்டறியப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

திகதி........................................ ...............................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

**திணைக்கள / நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

(அரச/மாகாண அரச சேவையில்/அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில்/நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்)

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்களுக்கு,

இந்த நிறுவனத்தில் .................................................................................................... பதவியை வகிக்கின்ற திரு/திருமதி/செல்வி.......................................................................... அவர்களின் விண்ணபத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் உரிய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் / நிரந்தரமாக்கப்படவில்லை, இவரின் வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது, இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை, இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை என உறுதிசெய்கின்றேன். இவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுவாராயின், இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும். (தயவுசெய்து தேவையற்ற சொற்களை வெட்டி விடவும்)

திகதி:..............................

..............................................................................
திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரை)

09-73

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு**

ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2025, செத்தெம்பர்

2014.10.11 ஆந் திகதிய 1883/17 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக்கோவையின் 08 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பும், அத்தோடு பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்துவதற்கு முன்பும், உத்தியோகத்தர் ஒருவர் அந்நியமனம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து மூன்று வருட காலத்தினுள் சித்தியடைய வேண்டியதுமான திணைக்களப் பரீட்சை 2025.11.02 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும்.

02. **தகைமைகள்** :

உரிய பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களும், நியமனத்தில் உறுதிப்படுத்தப்படாத பல் சத்திர சிகிச்சை நிபுணர்களும் இந்தப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும். மேலும் இத்திணைக்களப் பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத நிர்வாகத் தரத்தைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் இப்பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.

03. **விண்ணப்பங்கள்:**

இச் சுற்றுநிருபத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, இலக்கம் 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, "சுவசிரிபாய", கொழும்பு - 10 என்னும் முகவரிக்கு 2025.09.19 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2025 செத்தெம்பர்" என குறிப்பிடுதல் வேண்டும். இத்திணைக்களப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதை தனிநபர் கோவைகளை பேணும் உத்தியோகத்தரும், விண்ணப்பத்தில்

வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் சரியானவை என்பதை நிறுவனத் தலைவரும் சான்றுப்படுத்துதல் கட்டாயமாகும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா 110 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையொன்றையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ, அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

**கவனிக்கவும்.-** மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பம் A4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்பட வேண்டும். முதற்பக்கத்தில் இலக்கம் 01 - 04 (உ) வரையும், இரண்டாம் பக்கத்தில் 04 (ஊ)-09 வரையும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

04. **பரீட்சைக் கட்டணம்.-**

(i) முதன் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விலக்களிக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25.00 வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடி நீக்கம் புரியப்படுதல் வேண்டும்.

(ii) எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படுதலோ புரியப்படமாட்டாது.

05. **பரீட்சைக்கு உட்படுத்தல்.-**

(i) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ் அனுமதிப்பத்திரங்களை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படாத எந்த ஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(ii) விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்:

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை ;
(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் ;
(ஈ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

(iii) தவிர்க்க முடியாத காரணத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதவிடத்து சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் தங்களினது பரீட்சைச் சுட்டெண், பரீட்சை நிலையம் என்பவற்றினை பெற்றுக்கொண்டு தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவரின் கடிதத்துடன் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில், இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுட்டெண்ணில் தாங்கள் பரீட்சைக்கு தோற்ற முடியும். அனுமதி அட்டை கிடைக்கப்பெற்றவர்கள் கட்டாயமாக கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு வருதல் வேண்டும். (கையொப்பத்தினை உறுதிப்படுத்திய கடிதம் அல்லது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை முன்னளிப்பு செய்யாதவர்கள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்). (சுகாதார அமைச்சின் இணையத்தள முகவரி : www.health.gov.lk).

06. **பரீட்சைத் திட்டம்.-**

இப்பரீட்சை, மூன்று எழுத்து மூல கட்டுரை வினாப்பத்திரங்களையும் சிங்களம்/ தமிழ் வாய்மொழிப் பரீட்சை ஆகிய 04 பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவுக்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரே அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக் கொள்ளலாம்.

07. **பரீட்சைப் பாடத்திட்டம்.-**

7.1 **எழுத்துப் பரீட்சை**

7.1.1 **தாபனவிதிக்கோவை வினாத்தாள்**

நேரம் 02 மணித்தியாலம். 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**பாடவிதானம்**

(i) சுகாதார அமைச்சின் சுகாதாரத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்குவிதிகள்.
(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள்.
(iii) தாபனவிதிக்கோவை
I ஆம் பிரிவு :- VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII அத்தியாயங்கள்.

II ஆம் பிரிவு :- XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.

7.1.2 **வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம் வினாத்தாள்**

நேரம் : 1 1/ 2 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**பாடவிதானம்**

சுகாதாரக் கைநூல்

(i) வைத்தியசாலைகள், பொதுச் சுகாதார நிர்வாகம்
(ii) ஆய்வுகூட சேவை முகாமைத்துவம்
(iii) மருந்து முகாமைத்துவம்

7.1.3 **கணக்கியல் :**

நேரம் 02 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்,

**பாடவிதானம் :**

(i) சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள்
(ii) சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைந்நூலில் நிதி தொடர்பான பந்தி
(iii) சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப்பிரமாணம்

| | |
|---|---|
| I ஆம் அத்தியாயம் - | நிதிப்பிரமாணம் 1, 2, 78 |
| II ஆம் அத்தியாயம் - | நிதிப்பிரமாணம் 90, 91, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 113, 115, 118, 119 |
| III ஆம் அத்தியாயம் - | நிதிப்பிரமாணம் 124, 125, 126, 127, 128, 131, 133, 134, 135, 136, 137, 138, 139, 140, 142, 143, 151, 152, 154, 155, 156, 189 |
| V ஆம் அத்தியாயம் - | நிதிப்பிரமாணம் 200, 201, 215, 225, 238, 245, 255, 257, 260 |
| VI ஆம் அத்தியாயம் - | நிதிப்பிரமாணம் 380, 381, 382, 383, 384, 385, 386, 388, 389, 390, 391, 392, 393, 394 |
| VII ஆம் அத்தியாயம் - | நிதிப்பிரமாணம் 488, 493 |
| VIII ஆம் அத்தியாயம் - | நிதிப்பிரமாணம் 715, 716, 756, 757, 758 |

**பெறுகை வழிகாட்டிக் கோவை :**

1 ஆம் அத்தியாயம் - அனைத்துப் பிரிவுகளும்
2 ஆம் அத்தியாயம் - 2.3, 2.4, 2.5, 2.6, 2.7, 2.8
3 ஆம் அத்தியாயம் - 3.1, 3.2, 3.3, 3.4, 3.5, 3.6, 3.7, 3.8, 3.9

7.2 **சிங்களம்/ தமிழ் / வாய்மொழிப் பரீட்சை.-**

சிங்களம்/ தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும்பொழுது மேலோங்கும் நிகழ்வுகள் தொடர்பாக சிங்கள மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழியிலும், தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழியிலும் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல். (நேரம் : 10 நிமிடம்)

08. **பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்.-**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினைப் பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரனியல் உபகரணங்களைப் பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. தயவுசெய்து இச்சுற்றுநிருபத்தை உங்கள் நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதன் ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்களை www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

**குறிப்பு**.- இச்சுற்றுநிருப கடிதத்தில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புக்களில் ஏதாவது ஒவ்வாமை காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.

வைத்தியர் அனில் ஜாசிங்க,
செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
"சுவசிறிபாய",
385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு - 10,
2025.08.17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| அலுவலக பிரயோகத்தின் பொருட்டு |
|---|

**ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை – 2025, செத்தெம்பர்**

01. (அ) (i) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (தமிழில்) :.................................................................................................
..................................................................................................................................................

(ii) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :...........................................................................................
..................................................................................................................................................

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) பதவி (உரிய கூட்டினுள் (✓) அடையாளமிடுக.)

(i) வைத்திய உத்தியோகத்தர் : ☐ (ii) பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர் : ☐

(iii) தகுதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி :.....................................................................................

(iv) ஆரம்ப தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி/ தரம் II :.................................................................................

02. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூட்டினுள் (✓ ) அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் (x) குறியை இடவும்.

வைத்தியசாலைகள் மருந்துச்சாலைகள் என்பவற்றின் நிர்வாகம் : ☐ தாபன விதிக்கோவை : ☐ கணக்கியல் : ☐

சிங்களம் வாய்மொழி : ☐ தமிழ் வாய்மொழி : ☐

03. பரீட்சைக்குத் தோற்றும் மொழி (உரிய கூட்டினுள் (✓) அடையாளத்தை இடவும்)

சிங்களம் : ☐ ஆங்கிலம் : ☐ தமிழ் : ☐

04. (அ) (i) தற்பொழுது சேவையாற்றும் சேவை நிலையம் :.................................................................................

(ii) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது : மத்திய அரசின் கீழ் ☐
மாகாண அரசின் கீழ் ☐

(ஆ) (i) மாகாண சபையாயின் உரிய மாகாணம் :.................................................................................

(ii) அதற்குரிய மாவட்டம் :.................................................................................................................

(இ) (i) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ii) மின்னஞ்சல் முகவரி :.........................................................................................................................

(ஈ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

(உ) கீழ்வரும் பரீட்சை நிலையங்களுள் விரும்பிய பரீட்சை நிலையம்.- (தெரிவுசெய்யும் பரீட்சை நிலையத்திற்கு போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அல்லது சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அழைக்கப்படுவர்) பொருத்தமான கூட்டினுள் சரி (✓) அடையாளமிடுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | | கந்தானை | | அம்பாந்தோட்டை | | அம்பாறை | |
| களுத்துறை | | காலி | | பதுளை | | வவுனியா | |
| குருநாகல் | | அநுராதபுரம் | | இரத்தினபுரி | | பொலன்னறுவை | |
| கண்டி | | மட்டக்களப்பு | | யாழ்ப்பாணம் | | திருகோணமலை | |

(ஊ) அனுமதிப்பத்திரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9" x 4" அளவுள்ள ரூபா 110.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறை ஒன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(எ) (i) அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) :...........................................................................................
..........................................................................................................................................................

(ii) அஞ்சல் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :......................................................................................
..........................................................................................................................................................

05. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீரா? :...................................................................................

(ஆ) முதன் முறை அல்லாவிடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா? அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா? :..........................................................................................................

| |
|---|
| முத்திரைக் கூட்டில் (முத்திரையை ஒட்டி அதன் மீது கையொப்பமிடுக.) |

06. **விண்ணப்பதாரரின் சான்றிதழ்** :

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில் :

(i) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக என்றபடியால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும்/ முதன் முறை அல்லாதபடியால் ரூபா .......... பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ளேனெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதார அமைச்சினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தத் தன்மையை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் அமைவேன் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :.........................

07. **சுயவிபரக் கோவையினைக் கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ் :**

இவ்விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் / பின்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், இத்திணைக்களப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பதாரி பூர்த்திசெய்துள்ளார் என்பதையும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் விண்ணப்பம் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................
பெயர்

.......................
கையொப்பமும் திகதியும்.

08. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

திருவாளர்/ திருமதி/ செல்வி ................................ என்பவர் எனது நிறுவனத்தில் சேவை புரியும் வைத்திய உத்தியோகத்தர்/ பல் வைத்தியர் என்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை/ அல்லாத படியால் ரூபா ............ பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/ முத்திரை ஒட்டவேண்டியதில்லை எனவும் விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக் கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் எனது முன்னிலையில் கைபொப்பம் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :.......................

09. **விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ் :**

திருவாளர்/ திருமதி/ செல்வி ................................. என்பவர் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர் ஒருவராக/ பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர் வழிக்கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு/ விசேட இயக்கத்
தலைவரின் கையொப்பம்
(பதிவு முத்திரை இடப்படுதல் வேண்டும்).

திகதி :.......................

(தேவையற்றவற்றைக் கீறிவிடவும்.)

09-24

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.-*** *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2025***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வியாழன் | 04.09.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.08.2025 |
| | | வெள்ளி | 12.09.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.08.2025 |
| | | வெள்ளி | 19.09.2025 | .. | நண்பகல் 12 | வியாழன் | 04.09.2025 |
| | | வெள்ளி | 26.09.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.09.2025 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 03.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.09.2025 |
| | | வெள்ளி | 10.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.09.2025 |
| | | வெள்ளி | 17.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.10.2025 |
| | | வெள்ளி | 24.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.10.2025 |
| | | வெள்ளி | 31.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.10.2025 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 07.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.10.2025 |
| | | வெள்ளி | 14.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.10.2025 |
| | | வெள்ளி | 21.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.11.2025 |
| | | வெள்ளி | 28.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.11.2025 |

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*